

## இரண்டு வார்த்தை

ஒரு மனிதன் எத்தனை ஆண்டுகள் இந்த மண்ணுலகில் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல. அவன் எப்படி வாழ்கிறான்? என்பதே வரலாற்றுப் பொன்னேடுகளில் பொறிக்கப்படுகிறது. என் சொந்த வாழ்க்கையில் நான் அறிந்தவற்றை இந்த நல்ல சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

என்னுடைய அருமைத் தந்தையாகவும், குருநாதராகவும், வழிகாட்டியுமாகத் திகழ்ந்த எம்பெருமானார் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகள் எனக்கு பூஜை முறைகளை ஆகம விதிமுறைகளின்படி கற்றுக் கொடுத்தார்.

வேத விளக்கங்கள், பிரம்மச்சர்யம், ஞானம், கர்மயோகம், ஞான யோகம், தியானம் . சத்சங்கம், பக்தி, வைராக்கியம் ஆகிய அனைத்தையும் கற்பித்தார். ஒரு தந்தை, மகன் என்ற முறையில் மட்டும் நாங்கள் பழகவில்லை. அவருடைய நிழலைப்போல் நான் அவரைத் தொடர்ந்து கொண்டேயிருந்தேன். அவருக்கு சேவை செய்வதை நான் பெரும் பாக்கியமாகக் கருதினேன். தன்னுடைய பிள்ளை வேறு... உலகத்துப் பிள்ளைகள் வேறு என்ற வேறுபாடு அறியாத தூய நெஞ்சத்தினை அவர் கொண்டிருந்தார்.

அவர் எனக்குக் கற்றுக் கொடுத்த பூஜை முறைகளை விட இந்த உலகில் எப்படி வாழ வேண்டும் என்று செயல் முறையில் வாழ்ந்து காட்டியதுதான் பெரும் பயனை எனக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. இந்த உலகில் வாழும் மனிதர்கள் எல்லாத் துன்பங்களிலிருந்தும் நீங்கி எல்லா வளத்துடன் வாழ வேண்டும் என்று மனப்பூர்வமாக அவர் விரும்பினார்.

அதற்காகவே அவர் அம்பாளிடம் பிரார்த்தனை செய்தார். ஆடம்பரம் அவருக்கு

அறவே பிடிக்காது. எளிமையான வாழ்க்கை நடத்தி எல்லாருடைய நெஞ்சங்களிலும் நிறைந்தவராக அவர் திகழ்ந்தார். அவருடைய அந்தத் தூய வழிமுறைகள் தான் என்னை இன்று வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.

இந்த உலகில் நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு எல்லா வசதிகளையும், வழிமுறைகளையும் இறைவன் ஏற்படுத்தியிருக்கிறான். அதனைச் சரியான முறையில் பயன்படுத்தாத காரணத்தால் தான் பல்வேறு துன்பங்களை மனிதர்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

வானத்திலிருந்து பெய்யும் மழையை முறைப்படி சேமிக்காவிட்டால் என்ன ஆகிறது? வீணாக கடலில் கலந்துவிடும். ஏரி, கிணறு, குளம், ஆறு என்று அதைச் சேமித்து வைத்தால்தான் நம் வாழ்வை வளமாக்க அதைப் பயன்படுத்த முடியும்.

அதேபோல் நம்முடைய துன்பங்கள் அனைத்தையும் நீக்கும் மார்க்கங்கள் நம்மிடையே சூழ்ந்துள்ளன. அதை முறைப்படி பயன்படுத்தினால் நம்மை விட்டு எல்லாத் துன்பங்களும் ஓடிவிடும். ஆனந்தப் பெருவாழ்வை நாம் பெறுவோம்.

அதற்கு உதவுகின்ற வகையில் '**வாழ்வாங்கு வாழ வழி சொல்லும் நீதிகள்**' என்ற தலைப்பில் இந்நூல் வெளிவருகிறது.

ஏராளமான தகவல்களுடன் உருவாகியுள்ள இந் நூலை நம்முடைய நூல்களை வழக்கமாக வெளியிட்டு வரும் மதி நிலையம் பதிப்பகத்தார் அவர்கள் நல்ல முறையில் சிறப்பாகப் பதிப்பித்து வெளியிட்டிருப்பது குருவருளே.

இந்நூலை படிக்கும் அன்பர்கள் அனைவருக்கும்

**நீங்காத செல்வம் நிறைந்து வாழ**

**ஸ்ரீமத்புவனேஸ்வரிஸ்வாமிகளின்**

**திருவடிகளைச் சிந்திக்கிறேன்.**

ஸ்வாமிகளின் திருவடிகளில்

பரமஹம்ஸ ஸ்ரீமத்பரத்வாஜ் ஸ்வாமிகள்

